முருகப்பெருமான் துணை

**மகான் இராமதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.12.2023,** புதன்கிழமை

1. ஞானசோதி கண்ட அரங்கா
ஞானவான்கள் உருவாக
தானதரும பலமே வழியென
தனிப்பெருங் கருணையோடு
2. கருணையோடு தரும சாலை துவக்கி
கடைநிலை மாந்தருக்கும் பசிபிணி
இருக்கக் கூடாதென அருளும்
இணையிலா தருமனே அரங்கா
3. அரங்கா உன் தருமபலம் கூறி
அருளுவேன் துல்லிய ஆசி
வரமென சோபகிருது சிலைதிங்கள்
வல்லமைபட லாப திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 11 ம் நாள், 27.12.2023, புதன்கிழமை)
4. வாரமதில் இராமதேவர் யானும்
வழங்குவேன் வல்லமை கொண்ட
சோரமிலா நல்லுலகம் ஆகவே
சுத்தநெறி கொண்ட அரங்கன்
5. அரங்கன் சத்திய பாதை தன்னை
அனைவரும் ஏற்று வர
வரங்கள் குவிந்த ஞானசபையை
வணங்கி அனுகி வர
6. வருகவே அனைத்து மக்களும்
வள்ளல் தன்மை மிக்க
முருகப் பெருமான் வழிபாட்டில்
முழுமையும் நிறைவும் கண்டு

7. கண்டுமே ஆசாபாசம் வழி
கட்டுக்கள் தன்னை அவிழ்த்து
தொண்டுள்ளமிக்க வாழ்வை
துணிவுடன் ஏற்றுப் பணிந்து

8. பணிந்துமே தொடர்ந்து வந்து
பாவகரும செயல் விலக்கி
**(பிறஉயிர்களுக்கு எந்த விதத்திலும் துன்பம் தரக்கூடாது)**
துணிந்துமே தருமபலம் கூட்டி
தேர்ச்சிகாண்பர் அரங்க ஞானியால்

9. ஞானியால் ஞானவான் எனும்
நல்நிலை அடையாளம் கூடி
ஞானிகளாகவே அரங்கனால்
நல் தேர்வு செய்யப்பட்டு இனிதே

10. இனிதே உலகம் எங்கிலும்
இந்தவித சக்தி பெருகிட
கனிவேலவன் காட்சி கிட்டி
கலியினில் வந்த நோக்கம் அறிந்து

11. அறிந்து தெளிந்து துணிந்து
அரங்கர் மயமான உலகை
சிறந்த வண்ணம் படைப்பர்
செப்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

**கண்டுமே ஆசாபாசம் வழி**
**கட்டுக்கள் தன்னை அவிழ்த்து...**

– மகான் இராமதேவர் துல்லிய ஆசி நூல், கவி எண் 7.

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஆசியை பெற்று ஜென்மத்தை கடைத்தேற்ற விரும்புகின்ற மக்கள் பாசத்தையும் பொருள் பற்றையும் வென்று வெற்றி காண வேண்டும். வெற்றி பெற்றவர்க்கு முருகப்பெருமான் அருள் செய்வார்.